மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் சொல்லியது, நமக்கு இருக்கும் சர்க்கரையை நாமே எடுத்துக்கொள்ளக்கூடாதா, அதற்குக்கூட மத்திய அரசாங்கத்தின் ஆணையை எதிர்பார்க்கவேண்டுமா என்று திரு. வகாப் அவர்கள் கேட்டார்கள். இப்போது இருக்கும் ஆணைப்படி மத்திய அரசாங்கம் தான் சர்க்கரை கட்டுப்பாட்டை வைத்து இருக்கிறது. அவர்கள் ஒரு அடிப் படை வைத்து தருகிறார்கள். அவர்கள் கொடுக்கிற ஆணையைப் பொறுத்துத் தான் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலை தமிழகத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் நாமே எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் தேவை என்பதும் மாநில சுயாட்சியில் அடங்கியிருக்கிறது என்றுதான் தெரிவித்தேன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சர்க்கரையை விநியோகிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. அதற்கு விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் யாரிடத்தில் இருக்கிறது? அகில இந்தியா விலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? காஷ்மீரத்திலே சர்க்கரை விலை குறைவு என்று சொல்லுகிறார்கள். ஒரே இந்தியா என்று பேசும் மத்திய அரசாங்கம் இதற்கு ஒரே மாதிரியான விலையை நிர்ணயிக்க வேண்டாமா? அதற்கு இந்த அரசாங்கம் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காஷ்மீரத்தைப் பற்றி எனக்குத் தகவல் இல்லை. ஆனால் இந்தியா முழுவதற்கும் ரூ. 2 என்ற விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று ஆணைபோடப்பட்டு, விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

வால்பாறை துணைதாசில்தார் அலுவலகத்துக்குக் கட்டடம்

* 462 வினா—**திரு. இ. ராமசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வால்பாறை துணைத் தாசில்தார் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற் கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

A.U.M. Canal in Kanyakumari District.

* 463 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total area of the A.U.M. Canal in Kanyakumari district fit for boat passage; and

(*b*) the steps taken to extend this boat passage up to Cape Comorin?